# தமிழ் வளர்ச்சிக் கழகம்
(THE TAMIL ACADEMY)

ம. ப. பெரியசாமித் தூரன்
பிரதம ஆசிரியர்.

கலைக்களஞ்சியக் காரியாலயம்
சர்வகலாசாலைக் கட்டிடம்

27 FEB 1952

சென்னை 5. 25-2-1952.

அன்புடையீர்,

நமஸ்காரம். நான் முன்பு எழுதிய கடிதங்கள் தங்களுக்குக் கிடைத்திருக்கும். <u>அணுச்சக்தி</u> பற்றிய தங்கள் கட்டுரை மிக முக்கியமாக எங்களுக்கு முன்னாலேயே வேண்டியிருக்கிறது. அதைத் தாங்கள் உடனே அனுப்பிக்கொடுத்தால் மிகவும் அனுகூலமாக இருக்கும். முதல் தொகுதியில் இந்த கட்டுரை இடம்பெற வேண்டும். ஆதலால் இதை மட்டுமாவது முதலில் அனுப்பிக் கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

நான் எழுதும் கடிதங்களுக்கு தங்களிடமிருந்து ஒரு பதிலும் கிடைக்கப்படவில்லை. பதில் ஒன்றும் வராவிட்டாலும் பாதகமில்லை. ~~எழுதிய~~ கட்டுரை வந்துவிட்டால் போதும். ஆவலோடு கட்டுரையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். தயவு செய்து அதை அனுப்பித் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புள்ள,

ம.ப. தூரன்

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்,
நேஷனல் பிஸிகல் லெபாரட்ரி,
<u>புதுடெல்லி</u>.